**OS.300/2018 P.W.1- வஜ்ரவேலு 23.01.2026**

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

நான் கல்லூரியில் முதல்வராக இருந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன் என்றால் சரிதான். 2ம் வாதியான என் மனைவி கல்லூரியில் பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். நாங்கள் இருவரும் நன்கு கல்வியறிவு பெற்றுள்ளவர்களாக இருப்பதால் ஒரு சொத்து வாங்கும் போதும், விற்கும் போதும் அது சம்பந்தப்பட்ட விவரங்கள் எங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கின் 3ம் பிரதிவாதி புல எண்.38/2-ல் 59 செண்ட் நிலம் வைத்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 59 செண்ட் நிலத்தில் 44 செண்ட் நிலத்தை 1ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதி உஷா பாலசுப்ரமணியத்திடம் இருந்து கிரயம் பெற்றார் என்றால் சரிதான். மீதமுள்ள 15 செண்ட் நிலத்தை 3ம் பிரதிவாதி தன் கைவசம் வைத்து பராமரித்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கிரயம் பெற்ற காலத்தில் 44 செண்ட் நிலத்தை 3ம் பிரதிவாதியிடமிருந்து 1ம் பிரதிவாதி கிரயம் பெற்றார் என்ற விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் அதை தெரிந்து கொள்ளவில்லை, தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. 1ம் பிரதிவாதி 44 செண்ட் நிலத்தை கிரயம் பெற்று அதில் மனைகளை ஏற்படுத்தி அதில் மனை எண்கள்.100 மற்றும் 101 ஆகிய மனைகளை நான் கிரயம் பெற்றேன் என்றால் சரிதான். அவ்வாறு 44 செண்ட் நிலத்தை மனைகளாக பிரிக்கும்போது எந்த இடத்தில் குறிப்பாக சாலை அமைக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் நான் மனை எண்.100 மற்றும் 101-யை கிரயம் பெற்றபோது 1ம் பிரதிவாதி தன் மனைகளுக்கு நகர மற்றும் கிராம திட்டமிடல் இயக்குநரிடமிருந்து அனுமதி பெற்றார் என்று கூறியுள்ளேன். மேற்படி அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட அங்கீகார வரைப்படத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தற்போது சாட்சியிடம் நிரூபண உறுதிக்கூற்றை காட்டி மேற்படி வரைபட ஒப்புதல் எத்தனையாவது ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்று கேட்டபோது சாட்சி அதனை படித்து பார்த்து அதனை தாக்கல் செய்யவில்லை என்று கூறுகிறார். 1ம் பிரதிவாதி ஏற்படுத்திய வீட்டு மனைகள் அங்கீகரிக்கப் படவில்லை என்றால் சரியல்ல. மனை எண்.99 பற்றி எனக்கு விவரம் தெரியாது. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள அங்கீகரிக்கப்படாத மனை பிரிவில் மனை எண்.99ல் 11 செண்ட் நிலம் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. எனது மனைக்கு மேற்கே மனை எண்.99 உள்ளது

என்றால் சாட்சி வா.சா.ஆ.5யை படித்து பார்த்து ஆம் என்று கூறுகிறார். மனை எண்.99 1ம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்பதை காட்ட வழக்குரையுடன் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி சங்கம் கூட்டுறவு சங்கங்கள் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கம் என்றால் சரிதான். மேற்படி சங்கத்தில் நானும், 2ம் வாதியான என் மனைவியும் உறுப்பினர்கள் என்றால் சரிதான். உறுப்பினர்கள் என்ற முறையில் 1ம் பிரதிவாதி சங்கத்தின் விதிகள் மற்றும் உபவிதிகள் பற்றி எனக்கு தெரியும் என்றால் தெரியாது. எனக்கு விதிகளை பற்றி தெரியவில்லை என்றாலும், உறுப்பினர்கள் என்ற முறையில் நாங்கள் அந்த விதிகளுக்கு கட்டுப்பட்டவர்கள் என்றால் சரிதான். எங்களுக்கு 1ம் பிரதிவாதி கூட்டுறவு சங்கத்தின் விதிமுறைகள் பற்றி நன்கு தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி 1ம் பிரதிவாதி சங்கத்தின் விதிமுறைப்படி ஒரு குடும்பத்திற்கு ஒரு மனை தான் விற்கமுடியும் என்றால் அது பற்றி தெரியாது. அவ்வாறு 1ம் பிரதிவாதியிடமிருந்து மனையை வாங்கக்கூடிய ஒரு நபர் 5 ஆண்டு காலத்திற்குள் அதில் வீடு கட்ட வேண்டுமென்று விதி உள்ளது என்றால் தெரியாது. நாளது தேதி வரை மனை எண்கள்.100 மற்றும் 101-ல் நாங்கள் வீடு கட்டவில்லை என்றால் சரிதான். நானும், 2ம் வாதியும் மனை எண்கள்.100 மற்றும் 101-ல் வீடுகள் கட்ட வேண்டுமென்ற எண்ணத்தில் வாங்கவில்லை என்றும், குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்கவேண்டுமென்ற எண்ணத்தில் வாங்கினோம் என்றால் அவ்வாறு நினைத்திருந்தால் கூடுதல் விலைக்கே இதற்குள் விற்றிருக்க முடியும். நான் வழக்குரையில் காட்டியுள்ள சி அட்டவணை சொத்தானது 4 சென்ட் என்று காட்டியுள்ளேன். அதில் ஆக்கிரமிப்பு 1794 சதுர அடி ஆகும். 1ம் பிரதிவாதி, 3வது பிரதிவாதிக்கு 44 சென்ட் விற்றது போக மீதமுள்ள 15 சென்டில் நான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சி அட்டவணை சொத்தான 4 சென்ட் நிலம் அடங்கும் என்றால் சரியல்ல. நான் சி அட்டவணையில் காட்டியுள்ள 4 சென்ட் நிலமும், மனை எண்.99-ல் உள்ள 11 சென்ட் நிலமும் சேர்ந்து 3ம் பிரதிவாதியின் கையிருப்பு சொத்து என்றால் சரியல்ல. மீதமுள்ள 15 சென்ட் நிலத்தை 3ம் பிரதிவாதியிடம் இருந்து 1ம் பிரதிவாதி கிரயம் பெறவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொதுவாக ஒரு இடத்தை நில உரிமையாளரிடமிருந்து கிரயம் பெறாமல் 3ம் நபர்

ஒருவர் அதனை மனைகளாக பிரிக்க முடியாது என்றால் சரிதான். மனை எண்கள்.100 மற்றும் 101க்கான அனைத்து பரிவர்த்தனைகளையும் 1ம் பிரதிவாதியிடம் தான் செய்தேனே தவிர 3ம் பிரதிவாதியிடம் செய்யவில்லை என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)